நந்தி

மாலை 3 | 1966 மார்ச் விசுவாவசு, மாசி. | மணி 5

சென்னையின் அற்புதக் காட்சிகள்

தேனினும் இனிய தமிழ் மொழியையும், தமிழ் மருத்துவத்தையும், அகத்திய முனிவனையும் தந்த, தமிழ்க் கடவுள் முருகன், சென்னை நகரின் வீதிகளிலே மனித வடிவத்தில் உலவுகின்றான். அவன் கண்ட காட்சிகளை நீங்களும் காணுங்கள்.

மிக அழகு வாய்ந்த சென்னை நகரம் என எழுத்தளவில் போற்றப் படுகிறது. சென்டிரல் ரயில் நிலையத்திற்கருகில் போகும்போது கைக் குட்டையால் மூக்கைப் பிடித்துக்கொள்ளுங்கள். சிறந்த சவ்வாது, புனுகு, அத்தர் அனைத்தும் தோற்றுப் போகும், மூர்மார்க்கட்டை ஒட்டிப்போகும், அல்ல தேங்கி நிற்கும் ஆற்று நீரின் நறுமணம். மௌன்டுரோட்டிற்குப் போங்கள். அங்கும் நறுமணத்திற்கு வாட்டமில்லை. அருகில் சிலை வடிவமாக நிற்கும், கர்ம வீரர், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராசர், எப்படித்தான் சகித்துக்கொண்டு இரவும், பகலும் நிற்கிறாரோ ?

இந்த அவல நிலைமையை நீக்க எவரும் முயற்சிக்கவில்லை. நகரசபை பணமில்லையென்று ஓலமிடுகிறது. அதற்கு வரும் வருமானம், பல்லாயிரக் கணக்கான சிப்பந்திகளுக்கு மாதா மாதம் ஊதியம் கொடுக்கவே போதவில்லையென்று கண்ணீர் வடிக்கிறது. அரசாங்கமோ இதனை செவியில் போட்டுக்கொள்ள மறுக்கிறது.

சென்னை நகரிலுள்ள மார்க்கட்டுகளைப் பற்றிச் சொல்லவா ? சாக்கடைகளுக்கு அருகில்தான் காய்கறி கடைகளும், பலகாரக் கடைகளும். இந்தக் காய்கறிகளை வாங்கி உண்ணும் மக்களுக்கு நோய்தான் வாராமலிருக்குமா ?

நடைபாதைகளில் சாப்பாடு விற்பவர்களைப் பாருங்கள். அலுவலகங்களில் பணி புரியும் கனவான்களுக்கு பகல் உணவு கொண்டுவரும் சீமாட்டிகள், பாத்திரங்களில் மிகுந்த உணவை, பல. ரக உணவாகக்

கலந்து, அதே பாத்திரங்களில், குஷ்டரோகிகளுக்கும் ரிக்ஷா சகோதரர்களுக்கும் பங்கிடும்* காட்சிகளைப் பாருங்கள். இதனால் நோய் பரவாதிருக்குமா ?

மாணவ, மாணவிகள், கல்வி பயிலும் பள்ளிகளுக்குமுன் நடப்பதைப் பாருங்கள். வேர்க்கடலை, மாங்காய், வெள்ளரிக்காய், ஐஸ்கிரீம் விற்பதைப் பாருங்கள். ஒன்றுமறியா பாலகர்கள் நோயை எப்படி சம்பாதித்துக் கொள்கிறார்கள் என்று ஊகித்துக்கொள்ளுங்கள்.

உணவு விடுதிகளுக்குப் போங்கள். இங்கே நடக்கும் அக்கிரமங்களை ஏட்டில் எழுத முடியாது.

அரண்மனைக்காரத் தெருவிற்கு செவ்வாய்கிழமை மாலை போயிருக்கிறீர்களா ? இங்கேயுள்ள மாதாகோயிலுக்கு, கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, மற்ற சமூகத்தினரும் ஆயிரக்கணக்காக வருகிறார்கள். சாலை ஓரத்தில் வரிசையாக காட்சி யளிக்கும் நூற்றுக்கணக்கான பெரு நோயினரைத் தாண்டிக்கொண்டுதான் நீங்கள் போகவேண்டும். இந்த நிலை, மாதங்களல்ல, ஆண்டுக்கணக்காக இருந்து வருகிறது. இந்தத் தொல்லையை நீக்க எந்த முயற்சியும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நடைபாதைகளில் பாதசாரிகள் நடக்க இடமில்லை. சில்லரை வியாபாரிகள் ஆக்கிரமித்துக்கொண்டு விட்டனர். போலீசாரும் இவர்களும் கண்ணும்பூச்சி விளையாடுகிறார்கள்.

வெளிநாட்டுப் பிரயாணிகள் இக் காட்சிகளைப் பார்த்துவிட்டுப் போய்க்கொண்டுதானிருக்கிறார்கள். அவர்கள் நம் சென்னை மாநகரைப் பற்றி தம் நாட்டில் போய்ச் சொல்வார்கள். அது நம் தமிழகத்தின் தலை நகருக்குப் பெருமை தராது.

நகரின் எல்லா பேட்டைகளிலும், பசு, எருமை முதலியவைகள் வாழும் இடங்களைப் பாருங்கள். இவைகளின் பாலைப் பருகும் மக்களுக்கு நோய் வராதிருக்குமா என்று யோசித்துக் கூறுங்கள். சென்னை நகரில், புதிய புதிய நோய்கள் வருவதற்கு மேலே காட்டிய காட்சிகளே அடிப்படையான காரணங்கள்.

அரசினர் ஆஸ்பத்திரிகளிலே நோயாளிகளுக்குப் போதிய இடமில்லை. மேலும் மேலும் ஆஸ்பத்திரிகளைக் கட்ட அரசினர் திட்டம் வகுக்கிறார்கள். சுகாதார சீர்கேட்டைத் திருத்த முயற்சித்தால், மக்கள் நோயில்லாது வாழும் சூழ்நிலையை அமைத்தால், ஆஸ்பத்திரிகளைப் பெருக்கவேண்டிய அவசியமே யில்லை யென்பதை உணரவேண்டும்.

கவிராஜ் வைத்தியர்கள் சங்கம்

சென்னை, இராயப்பேட்டை, பைக்கிராப்ட்ஸ் சாலையிலுள்ள கவிராஜ் வைத்தியர்கள் சங்க அலுவலகத்தில், ஷை சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் 20—2—1966 ஞாயிறன்று நடந்தது. "நந்தி'' ஆசிரியர் தவத்திரு. சுந்தரானந்த சரசுவதி அடிகளார் தலைமை வகித்தார்கள்.

சித்தவைத்தியர்கள் திருவாளர்கள். திரு. வி. கலியாணசுந்தரம், எம். கே. வீரராகவன், சொக்கலிங்கம், ஞானசுந்தர முதலியார், கேசவானந்த சுவாமிகள், டாக்டர். ஆ. ஆனந்தகுமார், ஜி. சி. ஐ. எம். முதலியோர், சுர நோயைப்பற்றியும், அதற்கான சித்த வைத்தியப்படி சிகிச்சை முறையைப் பற்றியும் தத்தம் அனுபவத்தைப் பேசினர்.

சித்த மருத்துவம் மிகவும் பழமையானது. கரு உற்பத்தியைப் பற்றி, நவீன விஞ்ஞானக் கருவிகள் கண்டுபிடிக்காத பண்டைக் காலத்திலேயே சித்தர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். தூரதர்சினி (Telescope) கண்ணாடி வருவதற்கு எத்தனையோ காலத்திற்கு முன்பு, சித்தர்கள் பல உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் சித்த மருத்துவ நூல்களைச் சரிவர ஆராய்ச்சி செய்யாததன் காரணமாகவே சித்த வைத்தியம் வளர்ச்சி யடையாமலே யிருக்கிறது. வைத்தியர்கள் தத்தம் அனுபவங்களை தொகுத்து எழுதி, அதை சங்கக் கூட்டத்தில் விவாதித்துப் பரிசீலனை செய்து புத்தக ரூபமாக வெளியிட வேண்டும். அப்பொழுதுதான் நவீன மருத்துவ விஞ்ஞானிகள் சித்த மருத்துவத்தின் சிறப்பை உணரும்படி செய்ய முடியும், என்ற கருத்துக்கள் கூட்டத்தில் பேசப்பட்டது.

திருக்குற்றாலம், அருட்பா நாவலர் திரு. வெ. முத்து அடிகள், தமிழ்நாடு மருத்துவர்கள் சங்கத் தலைவர், திருநெல்வேலி திரு. டி. சங்கரசுப்பு இவர்கள், தமிழ் மருத்துவப் பெரியார் பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களுக்கு தொண்ணூறு வயது நிரம்பியதை முன்னிட்டு, சித்த மருத்துவத் துறையில் அவர்கள் செய்திருக்கும் தொண்டைப் பாராட்டும் நோக்கத்துடன், வருகிற மார்ச் மாத இறுதியில் சென்னையில் நடக்கவிருக்கும் வைர விழாவில் எல்லா வைத்தியர்களும் தவறாது பங்கு கொள்ளுவதோடு, பொருளுதவியும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

தமிழ் நாடு மருத்துவர்கள் சங்க சென்னை மாவட்ட மாநாடு

மேற்குறித்த மாநாடு, சென்னை அரண்மனைக்காரத் தெரு கோக்கலே மண்டபத்தில் 23—2—1966 புதன்கிழமை மாலை நடைபெற்றது. தமிழ் நாடு மருத்துவர் சங்கத்தின் உபதலைவர் சித்த வைத்தியர் திரு. வி. கே. சாமி அவர்கள் தலைமை வகித்தார்கள்.

இசையரசு பி. என். கோவிந்தசாமி குழுவினரின் நாதசுர இசையுடன் மாநாடு தொடங்கியது.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் உயர் திரு. காமராஜரின் திருவுருவப் படத்தை, தமிழ் நாடு மண் பாண்ட உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு கே. பெருமாள் உடையார் அவர்களும், தமிழ் மருத்துவப் பெரியார் பண்டித எஸ். எஸ். ஆனந்தரின் திருவுருவப் படத்தை தவத்திரு சுந்தரானந்த சரசுவதி அவர்களும், உலக சமாதான தியாகமூர்த்தி, முன்னாள் பாரதப் பிரதமர் அமரர், லால் பகதூர் சாஸ்திரி அவர்களின் திருவுருவப் படத்தை, டாக்டர், ஆ. ஆனந்த குமார் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

தமிழ் நாடு மருத்துவர் சங்கத் தலைவர், திருநெல்வேலி திரு. தி. சங்கர் சுப்பு அவர்கள், பேசுகையில், மருத்துவ சமூகத்தினரின் தற்கால நிலையைப்பற்றியும், அவர்கள் முன்னேறுவதற்கான வழிகளைப்பற்றியும் பேசினார்.

மருத்துவ சமூகத்தினருக்கு சென்னை மேல் சபையில் கொடுக்கப்பட்டுள்ள நியமன ஸ்தாபனம் காலியாகப் போவதால், அந்த ஸ்தானத்தில் தலைவர் தி. சங்கரசுப்பு அவர்களை நியமனம் செய்யும்படி அரசினரை வேண்டிக் கொள்வதாக ஒரு தீர்மானம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

அறிக்கை

இதுவரை "நந்தி"க்கு சந்தா அனுப்பாத பழைய் சந்தாதார்களும், புதிய சந்தா சேர விரும்புகிறவர்களும் உடனே ஆண்டு சந்தா ரூ. 5 அனுப்பினல், மாலை 3 மணி 1 லிருந்து சேர்த்து அனுப்பபபடும் என்று அறிவிக்கப் படுகிறது.

நிர்வாகி,

"நந்தி"

சித்த வைத்திய சிறப்பு மருந்துகள்

புது உருவம்

கூஷ்மாண்ட் அல்வா

சரீர புஷ்டி உண்டுபண்ண
மனக்கவலை போக்க
உடல் சூட்டை தணிக்க
உற்சாகம் காட்ட

காற்றுப் போகா டின்களில் வெண்பூசணி மற்ற சரக்குகளும் சேர்க்கப்பட்ட அல்வா.

450 கிராம் டின் ரூ. 4-80

ஸ்பெஷல் பர்ஃபி

தேங்காயின் சத்தும், ஊட்ட சத்துக்களும் சேர்த்து கேக் மாதிரி தயாரிக்கப் பட்டது. ஜீரண சக்தியை வலுப்படுத்தி நரம்புகளுக்கு ஊட்டமளிக்கும்.

450 கிராம் டின் ரூ. 4-80

வாழைத்தேன்

சித்த வைத்தியத்தின் சிறப்பு உணவு. ஊட்ட சத்துக்களுடன் கூட டியூப்களில் அடைக்கப்பட்டிருக்கிறது.

150 கிராம் டியூப் ரூ. 1-95

டாக்டர் நிவாஸ் கெமிக்கல்ஸ்,

பார்மசூடிகல் மானுபாக்சரர்ஸ், டிரீட்மெண்ட்ஸ்,

32, கமலாலயம் வடகரை,

திருவாரூர்.

த. பெ. எண். **19** *(தஞ்சை மாவட்டம்) தொலை பேசி.* **142**

Statement about Ownership and other Particulars about Newspaper The "NANDHI"

FORM IV—See Rule 8.

1. Place of publication :—	Madras city, S. India
2. Periodicity of its publication :	Monthly
3. Printer's name	Sri. R. Ayyalu Naidu Valluvar Achagam
Nationality	Indian
Address	17A, Padavattamman Koil St. Madras-12.
4. Publisher's Name	His Holiness Sri-la-Sri Svami Sunderananda Sarasvathi
Nationality	Indian
Address:	9. Gajapathi Naidu Street. Shenoynagar, Madras-30.
5. Editor's Name	His Holiness Sri-la Sri-Svami Sunderananda Sarasvathi
Nationality	Indian
Address:	9. Gajapathi Naidu Street. Shenoynagar, Madras-30.
6. Names and addresses of individuals who own the News-paper and partners or share-holders holding more than one percent of the total capital.	Srimathi Andalammal Sole Owner, 9, Gajapthi Naidu Street, Shenoynagar, Madras-30.

I, Svami Sunderananda Sarasvathi, hereby declare that, the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated. 1st March 66.

(Sd.) Sunderananda Sarasvathi,

Signature of Publisher.

குறட்பாவின் திறப்பாடு

(திரு. வ. பெருமாள். எம். ஏ., பி.டி., எம். ஆர். ஏ. எஸ்.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம்.
கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்.)

(முன் தொடர்ச்சி)

வள்ளுவனாரின் சொல் வன்மை :

ஒரு பொருளை அறுதியிட்டு உறுதியாக உரைக்க விரும்புமிடத்து ஒரே பதத்தை இரண்டுமுறை வழங்குவது புலவர் இயல்பு. இத்தகைய சொற்களில் திட்பமும் உறுதியும் ஒருங்கே அமைகின்றன. பொய்யாமையாகிய நல்லறத்தை அறிவுறுத்தப் போந்த பேராசிரியர் வள்ளுவனார்.

" பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று "

என்று கூறுகின்றார். இரத்தலின் இழிவைக் கூறப்போந்த தேவராசப் பிள்ளை.

" இல்லெலாம் இரத்தல் அந்தோ
இழிவு இழிவு எந்த ஞான்றும் "

என்று மொழிகின்ற வில்லிப்புத்தூராரின் சொல்வன்மையில் காதற் சுவையும் இலக்கியச் சுவையும் கலந்துறைகின்றன. இதோ அந்த இலக்கியக் காட்சி.

" நோக்கிய கண் இமையால் நோக்கி நோக்கி நுண்ணியமென் புலவியிலே நொந்து நொந்து தேக்கியசெங் கனியிதழார் அமுதுண்டு உண்டு சேர்த்திய கைந்நெகிழாமல் சேர்ந்து சேர்ந்து. இராவணனின் நிலையை விளக்கப்போந்த கம்ப நாடர்

" ஆக்கை தீய உள்ளம் நைய ஆவி வேவ தாயினான்
ஊது வன் துருத்திபோல் உயிர்த்து உயிர்த்து உயங்கினான்
உரங்குடைந்து நொந்து நொந்து உளைந்துளைந்து ஒதுங்கினான்
தென்றல் வந்து எதிர்த்தபோது சிறுவானும் ஆயினான் "

என்று கூறுகிறார். சானகியின் நிலையை அசோக வனத்தில் கண்ட அனுமான்

" அருமையே அருமையே யாரி தாற்றுவார்
ஒருமையே எம்மனோர்க் குரைக்கற் பாலதோ "

என்று கூறுகின்றான். நட்பாராய்தலின் இன்றியமையாமையை வள்ளுவர் சொல்வன்மையுடன் நவில்கின்றார்.

" ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும் "

எனவே வள்ளுவரின் சொல்வன்மை செவிக்கும் சிந்தைக்கும் ஒருங்கே இன்பம் பயப்பதாகும்.

மென்மையும் திண்மையும் :

நங்கையிடம் மென்மை பொருந்தியிருக்கின்றது. எனவே அவர்களை மெல்லியளார்கள் என்று இயம்புவது தமிழ் இலக்கிய வழக்கு. எந்த நங்கையிடம் மென்மை இருக்கின்றதோ அதே நங்கையிடம் திண்மையும் அமைந்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். பெண்மையின் மெல்லினத்திலேயே கம்பர் கூறுகின்றார்,

" பஞ்சுஅனிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி "
அஞ்சொலிள மஞ்ஞை என அன்னமென மின்னும்
வஞ்சி என நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்."

வள்ளுவர் கூறுகின்ற பெண்மையின் மென்மையை ஈண்டு காண்போம். மலரினத்திலேயே மிகவும் மென்மையானது 'அனிச்சம்' என்ற ஒருவகையான மலராகும். அது மோந்த உடனேயே வாடிவிடும் நுண்ணிய தன்மையுடையது. பறவை இனத்தில் மிகவும் மென்மையும் அழகும் ஒருங்கே வாய்க்கப்பெற்றது அன்னப் பறவையாகும். அதன் சிறகும் மென்மையானதே. மங்கையின் மென்மையைக் கூறப்போந்த ஆசிரியர் அனிச்சப் பூவையும் அன்னத்தின் தூவியையும் எடுத்துக்கொண்டு விளக்குகின்றார். இவை இரண்டும் மாதரின் அடிக்கு நெருஞ்சி முள் போன்றது என்று விளக்கி விடுகின்றார். பொதுவாக மக்களின் திண்மையான உடலுறுப்பு காலாகும். அதிலும் காலின் அடிப்புறத்திலுள்ள (பாதம்) தோல் வன்மையும் திண்மையுமுடையது. அத்தகைய கால் அடிகளுக்கு இவை யிரண்டும் நெருஞ்சி முள் போன்றிருக்குமானல் மங்கையின் கால் எவ்வளவு மென்மையாக இருத்தல் வேண்டும். அடி இவ்வளவு மென்மையாக இருக்குமேயானல் உடல் எவ்வளவு மென்மையாக இருத்தல் வேண்டும் என்று கூருமல் ஆசிரியர் கற்போர் கற்பனைக்கு விட்டு விடுகின்ருர். மலர் மகளிர்க்குரியது; மென்மை வாய்ந்தது; நுட்பமானது; அழகு பொருந்தியது; மக்கள் மனத்தைக் கவரும் இயல்புடையது. அன்னம் மென்மையுடன் அழகும் வாய்ந்தது. அதுமட்டுமன்று, அன்ன நடையை நங்கையின் நடைக்கு உவமையாகக் கூறுவது இலக்கிய மரபு. பெண்மையின் மென்மையான தன்மையை விளக்கப் போந்த திருவள்ளுவனுர் பெண்களுக்கு முற்றிலும் தொடர்புள்ள பொருள்களை எடுத்துக் கூறிய பாங்கு நவில்வோர்க்கு நயம் பயப்பதாகும்.

" அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்." (நலம் புனைந்துரைத்தல்).

இவ்வளவு மென்மையானவளிடம் திண்மை எவ்வாறு இருக்க இயலும் என்ற ஐயப்பாடு எழலாம். மங்கையிடம் மென்மையும்

திண்மையும் கலந்து உறைகின்றன என்பதே வள்ளுவரின் வாய் மொழி. பெண்டிர் தம் நிறைகாக்கும் கற்பே திண்மை எனப்படும். கற்பென்னும் திண்மை வாய்ந்த பெண்மணியே மங்கையர் திலக மாகக் கருதப்படுவாள்.

" பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்."

மென்மையும் திண்மையும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகத் தோன் றியபோதிலும் அவை வேறுபட்டதல்ல. மென்மை என்பது உடல் மென்மை. திண்மை எனப்படுவது கற்பு என்னும் உள்ளத் திண்மை. எனவே உடல் மென்மையும் உள்ளத் திண்மையும் வாய்க்கப் பெற்றவளே சிறந்த பெண்மணியாவாள்.

பொதுமறையில் பொதுவுடைமை :

பொதுவுடைமை என்ற சொல்லைக்கேட்ட அளவிலேயே கார்ல் மார்க்ஸ், லெனின், ஸ்டாலின், டால்ஸ்டாய் ஆகியோரை நினைக் கின்றோமே தவிர திருவள்ளுவரை நாம் நினைப்பதில்லை. அது போன்றே பொதுடைமை நாடு என்ற பெயரைக் கேள்வியுற்ற வுடன் ரஷ்யா, சீனு ஆகிய நாடுகளைத்தான் நாம் நினைக்கின்றோம். ஆனால் தமிழகத்தை உள்ளுவதில்லை. இவற்றிற்கு மூலகாரணம் நாம் வள்ளுவரைப் பற்றியும் தமிழகத்தைப் பற்றியும் தெளிவாக உணர்ந்து கொள்ளாததேயாகும். ரஷ்ய நாட்டுப் பேரறிஞர்களும் மேல்நாட்டு அறிஞர்களும் பொதுவுடைமையைக் கண்டுபிடிப்பதற் கும் கூறுவதற்கும் முன்பாக திருவள்ளுவர் பொதுவுடைமைக்குத் தக்க வரையறுப்பளித்துள்ளார் என்று பகர்ந்தால் அது சற்றும் மிகையாகாது. அதிலும் ஒரே குறட்பாவில் ஆசிரியர் கூறுகின்ற திறன் பேருவகையும் பெருவியப்பும் ஒருங்கே அளிப்பதாகும். அதிலும் முதல் அடியில் மூன்று சீரிலேயே பொதுவுடைமையின் அடிப்படையான தத்துவத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக் கின்றார் என்பதை நோக்குமிடத்து வள்ளுவனார் பொதுவுடைமைத் தத்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர் என்பது தெற்றென விளங்கா நிற்கும். ஆசிரியர் வரையறுத்துள்ள பொதுவுடைமை அறத்தையும் அன்பையும் அடிப்படையாகக் கொண்டது என்பதை மட்டும் நாம் பொச்சாந்து விடக் கூடாது.

" பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."

அரிவையின் அருமையான தழுவுதலினால் ஏற்படும் இன்பம் பகுத் துண்ணும் பேரின்பத்தைப் போன்றது என்று கூறுகின்றார்.

" தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு."

நங்கையின் உடல்நல நுகர்ச்சியை நவிலும் பொழுதும் பகுத்துண்ணும் இன்பத்தை மறந்தாரல்லர். என்னே வள்ளுவனாரின் பெருந்தகைமை,

" பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது."

என்ற குறட்பாவும் இவண் சிந்திக்கத் தக்கது.

ஒரு மனமும் இரு மனமும் :

தமிழ் மக்கள் எல்லாப் பொருள்களையும் வகுத்துத் தொகுத்துக் கூறுவதில் தலை சிறந்தவர்கள் என்பது தேற்றம். இலக்கணத்தை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று ஐந்தாகப் பிரித்தனர். காற்றைக் கொண்டல், கோடை, வாடை, தென்றல் என்று நான்காகப் பிரித்தனர். நமது அருமை மொழியாம் பைந்தமிழை இயல், இசை, நாடகம் என மூன்றாக வகுத்தனர். பொருளை அகம் புறம் என இரண்டாக வகுத்தனர். ஆனால் ஒழுக்கத்தை வகுக்கவும் பிரிக்கவும் செய்யாது ஒன்றாகவே வைத்தனர். ஒருமனம் படைத்த நிறையுடை மகளிரே பெருமையுடன் வாழ முடியும் என்பது பெருநாவலரின் நல்லுரை.

" ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு."

திண்கற்பு வாய்க்கப்பெற்ற ஒருமை மகளிரைத் தவிர நிறையின் நீங்கிய மாதரை இருமனப் பெண்டிர்' என்று வள்ளுவர் நவில்கின்றார். இருமனப் பெண்டிரைப் பண்பில் மகளிர், பொருட்பெண்டிர், வரைவில் மகளிர், மாயமகளிர் என்று பல்வேறு பதங்களால் குறிப்பிடுகின்றார். சீத்தலைச் சாத்தனார் பொருள் விழையும் ஆய்தொடியாரைக் 'கொண்டி மகளிர்' என்று கூறுகின்றார். பொதுமகளிர் ஆடவனுடன் கலவியில் ஈடுபட்ட காலை அவள் உள்ளம் அவனை விழையாமல் அவன் பொருளைமட்டும் விழைந்து அதைப்பற்றியே உள்ளிக்கொண்டிருக்கும். இது அவளுடைய ஒரு மனத்தின் செயலாகும். அவளுடைய மற்றொரு மனம்' இவன் சென்ற பிறகு யாராவது பெரும் பொருளுடன் என்னிடம் வர்மாட்டார்களா' என்று எண்ணிக்கொண்டு எதிர்பார்த்தவண்ண மிருக்கும். எனவேதான் விலைமாதரை 'இருமனப் பெண்டிர்' என்று கூறுகிறார் எடுத்துக்காட்டாக ஒருவன் பொதுமக்களிடம் சென்று இன்பம் நுகர்ந்த பின்னர் அவனிடம் விடை பெற்று நீங்குங்காலை அவள் அழலானாள்.

" தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து "

என்ற பொன்மொழியை உணராத அவன் அவள் அழுகைக்குக் காரணத்தை வினவினான். அவள் " நீங்கள் இவ்வளவு விரைவாக

என்னைத் தன்னந் தனியே தவிக்கவிட்டுப் போகின்றீர்களே, யான் எவ்வாறு தனியாக இருப்பேன்'' என்று பிரிவாற்றுமையின் காரணமாகக் கற்புடைத் தலைவி தலைவனிடம் கண்ணீர் பெருக்குவது போன்று அவள் அழலானுள். அவனும் அவளுடைய போலிக் கண்ணீரின் தன்மையை உணராதவனுய் அவளுக்கு ஆறுதல் மொழி கூறிவிட்டு அவணின்று அகன்றுன். அவன் அகன்ற ஒரு சில விநடி கழித்து மற்றொருவன் அவள் மனையைக் குறுகி அவள் கண்ணீர் சொரிவதைக் கண்டான். 'ஏன் அழுகிருய்?' என்று வந்தவன் ஆய்தொடியை வினவ அவள் ''உங்கள் வரவை எதிர்பார்த்த வண்ணமிருந்ததால் என் கண்ணொளி மங்கி கண்ணீர்வரத் தொடங்கியது. ஏன் இவ்வளவு தாமதயாக வந்தீர்கள்? என்று ஊடுவது போன்று நடித்தாள்.

இருமனப் பெண்டிர் என்ற வள்ளுவனுர் வாய்மொழியில் எவ்வளவு உண்மையும் பொருளும் பொதிந்துள்ளது என்று மேற்கூறிய எடுத்துக்காட்டினுல் நன்கு அறிகின்றேரும். சோழன் நலங்கிள்ளி போர்க்குப் போகுமுன்பு ''என்னைப் பகைத்தவரை நான் வெல்லாது விடுவேனுயின் என் மாலை பொதுமகள் மார்பின்மேல் புரளுவதாக'' என்று வஞ்சினங் கூறிச் சென்றுன். எனவே பண்டைய அரசர்களும் சான்றேரர்களும் பொதுமகளின் முயக்கத்தை மிகவும் இழிவாகக் கருதினர் என்பதற்கு இது ஒன்றே தக்க சான்றுக அமைகின்றது. இருமனப் பெண்டிரின் பொய்ம்மை முயக்கம், கள், சூது ஆகியவைகளை விழைபவர்களிடம் செல்வம் ஒருபொழுதும் உறைவதில்லை என்பது செந்நாப்போதாரின் செம்மையுரையாகும்.

> '' இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
> திருநீக்கப் பட்டார் தொடர்பு.'' (வரைவின் மகளிர்)

கண்ணீரின் தன்மை :

கண்ணீரின் இயல்பை அன்புக் கண்ணீர், துன்பக் கண்ணீர், போலிக்கண்ணீர் என்று முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அகத்தே இருக்கும் அன்பை அடக்கிவைக்க யாராலும் இயலாது. அது கண்ணீரின் வழியாக வெளியாகி விடும்.

> '' அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
> புன்கண் நீர் பூசல் தரும்.'' (அன்புடைமை)

இராமன் கானகத்திற்கு ஏகிய காலை நீண்ட தமிழால் உலகை நேமியினளந்த தமிழ் முனிவன் அகத்தியனைக் கண்டான். அகத்தியன் இராமன்பால் பூண்ட அன்பின் திறத்தை அவன் சொரிந்த கண்ணீரே எடுத்துக் காட்டுகின்றது.

> '' நின்றவனை வந்தநெடி யோனடி பணிந்தான்
> அன்றவனும் அன்பொடு தழீஇ இயழுத கண்ணுன்
> நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தான்
> என்றுமுள தென்றமிழ் இயம்பியிசை கொண்டான்.'' (கம்பர்)

கோவலனைப் பறிகொடுத்த கண்ணகி கண்ணீருடன் பாண்டியனிடம் சென்று தன் வழக்கை எடுத்துரைக்கின்றாள்.

" கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

என்பதை உணர்ந்த தென்னவர்கோன் " கள்வனைக் கோறல் கடுங்கோலன்று" என்று கூறுகிறான். கற்புச் செல்வி, கோவலன் குற்றமற்றவன் என்பதை மெய்ப்பித்து விடுகின்றாள். அவள் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர், கூடல் கோனின் செல்வத்தைத் தேய்த்ததோடு வேந்தனின் உயிரையே வாங்கிற்று.

" காவி யுகுநீரும் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னான்."

" மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான் அக்காரிகைத் தன்சொற் செவியில்
உண்டளவே தோற்றான் உயிர் " (சிலப்பதிகாரம்)

இத்தகைய கண்ணீரின் தன்மையைத் திருவள்ளுவனார்,

" அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை."

என்று கூறுகிறார்.

" ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்."

என்பது பழமொழி.

உலோகிதாசன் நாகம் தீண்டி ஆவி துறந்தான் என்பதைக் கேட்ட சந்திரமதி காட்டிற்குச் சென்று தன் ஆருயிர் மகனின் பிணத்தைக் கண்டாள்; கதறி அழுதாள். அந்த அழுகை தன் மகன்பால் பூண்ட தாயன்பை அவன் இறந்ததால் ஏற்பட்ட துயரையும் ஒருங்கே தெரிவிக்கின்றது. எனவே அவள் சொரிந்த கண்ணீர் அன்புக் கண்ணீரும் துன்பக் கண்ணீரும் சேர்ந்த கலவைக் கண்ணீராகும்.

" கண்டனள் கதறி வீழ்ந்தாள்; கழுகெலா மிரியல் போகக்
கொண்டதோர் மகவி னுசை ஆவியைக் கொள்ளை கொள்ள
முண்டகக் கரத்தால் ஏந்தி முருகனை மடிமேல் வைத்தே
அண்டரும் மறுகி யேங்க வாய்திறந் தரற்ற லுற்றாள்."

(ஆசுகவிராசர்)

(தொடரும்)

ஆட்டையாம்பாளையம்
தமிழ் நாடு சித்த மருத்துவ நிலையம்

சித்த வைத்தியப் பேராசிரியர்கள் வருகை

கோவை மாவட்டம், அவனுசிக்கருகிலுள்ள, ஆட்டையாம் பாளையம் தமிழ் நாடு சித்த மருத்துவ நிலையத்திற்கு, தமிழக அரசினர் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம். அக் கல்லூரி பேராசிரியர் டாக்டர் பொ. குருசிரோன்மணி பி.ஏ., ஜி.சி.ஐ.எம்., அரசினர் நாட்டு மருத்துவத் துறை நிர்வாக அதிகாரி உயர்திரு கே. சிதம்பரம் பி.எஸ்.சி. அவர்கள் இம் மூவரும் 26—1—66 அன்று விஜயம் செய்தனர். நிலையத்தின் அதிபரும் பிரதம சித்த வைத்தியருமான திரு. மு. பழ. சேவகப்பெருமாள் அவர்கள் அதிகாரிகளை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். நிலையத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த மருத்துவ நூல்களைப் பார்வையிட்டனர்.

மருத்துவ நிலையத்திலிருந்து வெளியிடப்பட்ட நீரழிவு, நீரில் சர்க்கரை நோயை அறவே போக்கும் அப்ரேக் செந்தூரம், சித்தர் கற்பம், சித்தர் சஞ்சீவி, தயாரிக்கும் முறைகளை நூல் வழியில் கண்டார்கள். பூரண குணம் அடைந்தவர்களால் மருத்துவ நிலையத்திற்கு வழங்கப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களைப் பார்வையிட்டார்கள்.

நம் சித்தர் பெருமக்களால் கூறப்பட்டுள்ள பல பெரும் சக்தி வாய்ந்த மருந்துகளின் சிறப்புப்பற்றி திரு. சேவகப்பெருமாள் விளக்கிக் கூறினார். நம் தமிழ் நாட்டு அரசியலார் அவருக்கு ஊக்கமும், உதவியும் அளித்தால்தான் எல்லா மருந்துகளையும் செயல் படுத்திக் காட்டமுடியுமென்றும் சொன்னார்.

நாட்டில் பல வியாதிகள் தீராத நோயாகக் கருதப்பட்டு நிரந்தரமாக தனி மாளிகைகளில் வாழ்வு பெற்றுவிட்டதை நாட்டிலிருந்து ஒழித்துக்கட்ட முடியுமென்றும் சொன்னார்.

சித்தர்களால் மறைக்கப்பட்ட இரகசியப் பொருள்களான நான்கை தமிழர்களாகிய நாம், அடக்கமாகவும், பொறுப்புணர்ச்சியுடனும், பாதுகாப்பாக செயல்படுத்த வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

சிததர் மருந்துகள் என்ற பெயரில் பலரால் தயாரிக்கப்பட்டு வெளி வந்துள்ள (தன்வந்திரி பகவானும், யூகி முனிவராலும் போற்றப்பட்டு தன் நூல்களில் கையாளப்பட்ட) அகஸ்தியர் குழம்பு, கௌசிகர் குழம்பு, வெள்ளி பஸ்பம், இன்னும் பல மருந்துகள் நூலின்படி நோயைப் போக்காது மாறுபட்ட நிலையில் நோயாளர்களை ஆபத்துக்குள்ளாக்குவதை எடுத்துரைத்தார். இம் மருந்துகளில் உயிராகிய முப்பூ சேர்க்கப்படாததே காரணமென்றும்

அதனால்தான் மருந்துகள் சித்தர்கள் கருத்துக்கிணங்க செயலாற்றுது நூல்கள் பொய்யாகக் காட்சி யளிப்பதை பேராசிரியர்கள் நம்பத்தக்க விதம் எடுத்துக் கூறினர்.

உலகிலேயே மருத்துவத் துறையில் பெரும் புகழைப் பெற வேண்டிய சித்தர்களின் மருந்துகள் முப்பூச் சேர்த்து உண்மைப்படி வெளி வராததால் நாம் உலகின்முன் பின் தங்கிவிட்டோமென்றும் சொன்னர்.

நம்து தமிழக அரசியல் பெரியார்கள் சித்த மருத்துவத்துக்கு ஊக்கம்தந்து பெருமைப்படுத்த விரும்பினல் நாட்டில் மக்களின் சுகத்தைப் பாதுகாக்கவும், நோயை ஒழித்துக்கட்டவும் சர்க்காரோடும் மருத்துவத் துறைப் பெரியார்களோடும் ஒத்துழைப்பதாய் திரு மு. பழ. சேவகப்பெருமாள் உறுதி கூறினர்.

மீண்டும் பகல் ஒரு மணிக்கு மருத்துவப் பேராசிரியர்கள் கோயமுத்தூர் சென்றுர்கள். அவர்களை திரு மு. பழ. சேவகப் பெருமாள் வணக்கங் கூறி வழி யனுப்பி வைத்தார்.

"நந்தி"க்கு நன்கொடை

"நந்தி"யின் வளர்ச்சிக்கு, கீழ்க் குறிப்பிட்டுள்ள அன்பர்கள் நன்கொடை அனுப்பியுள்ளார்கள். அவர்களுக்கு எமது உளங் கனிந்த நன்றி.

தமிழ் சித்தர், வைத்திய சரபம், கவிராஜ், ச. எஸ். இராமசாமி, எரிசினம்பட்டி உடுமலைப்பேட்டை தாலூக்கா, கோவை மாவட்டம்.	ரூ.	50 0
சேலம், அரிசிப்பாளையம், இராஜ வைத்தியசாலை எஸ். வி. ஆர். கண்டர் அண்டு சன்ஸ்	ரூ.	50 0
சித்த வைத்தியர் : கே. இராமசாமி, இலுப்பூர் திருச்சி.	ரூ.	10 0
தமிழ் நாடு சித்த மருத்துவ நிலையம் ஆட்டையாம்பாளையம், அவனுசி அஞ்சல், கோவை மாவட்டம்.	ரூ.	10 0
சித்த வைத்தியர் : எம். குருநாதன், திண்டிவனம்	ரூ.	5 0
,, எச். முகம்மது யாகூப், திருச்சி	ரூ.	5 0
,, ஏ. எஸ். அமோஸ், கெலமங்கலம் - ஹோசூர்	ரூ.	5 0
,, கே. எஸ். முனுசாமி ராவ், கெலமங்கலம் - ஹோசூர்	ரூ.	5 0
,, பி. நஞ்சுண்ட ரெட்டி, ஹோசூர்	ரூ.	5 0
,, கே. கொய்யாமலை, காஞ்சி	ரூ.	3 0
,, வி.எம். பழனி நாட்டார், வேலூர்	ரூ.	2 0

இரசமணி தத்துவம்’

(சித்தயோகி டி. என். சி. என். சோமநாதர், மதுரை)

(முன் தொடர்ச்சி)

இனி பற்பல மணிகள் செய்முறை

1. “வியோமசுந்தரக் குளிகை.” — வேலிப்பருத்தி கர்க்கணம், மாசிப்பத்திரி இவற்றின் இலை, குமரியின் பருத்த வேர், இவைகளின் தனித் தனிச் சாற்றால் ஒவ்வொரு நாள் வாலை ரசத்தை அரைத்துப் புளித்த நீரால் கழுவி எடுத்த சூதம் நிட்கம்—5. துருசில் எடுத்த தாமிரப் பொடி களஞ்சு 1. சுவர்ணத் தூள், அப்ரேகச்சத்து உருக்கின் பொடி. இவை வகை களஞ்சு 1-ம், வெண்காரம் 1 களஞ்சும் புளிப்பு வகைச் சாரால் ஒரு நாளரைத்து உருட்டி எலுமிச்சன் பழத்துள் வைத்து காடி நீரில் தோலாந்திரமாக 3 நாள் எறித்தெடுத்தால் நல்ல மணியாக இருக்கும். இதுவே வியோம சுந்தரக் குளிகை.

இதை 1 வருடம் வாயிலடக்க யானை பலமுண்டு. ஆயுள் பிர்ம கற்ப காலம். கொடிவேலி வேர் தூள் 1 களஞ்சு காந்தப் பாத்திரத்தில் போட்டு தேன்விட்டு குளப்பி அதில் முறையோடு கிராமணம் செய்யவும். கிராமணம் திருமூலர் 1000, பக்கம்—30, 31 பார்க்கவும்.

2. ஆடகேசுர குளிகை: பாரதம் 3 களஞ்சி, சொர்ணம் தாமிரத்தில் செய்த பொடி 1 களஞ்சி (இரண்டும் சேர்ந்து 4 களஞ்சி) காந்தக் கல்வமிட்டு எலுமிச்சன் சாறு பின் சரக் கொன்றைப் புளி, மணிபுங்கன் இவைகளில் முறையே ஒவ்வொரு நாள் வீதம் 1 சாமம் அறைத்து ரவியில் வைத்து பின் காடியால் கழுவி உருட்டி குளிகையாகச் செய்துகொண்டு வெண் துணியில் மணியை முடிந்து தோலாந்திரத்தில் வைத்து பசும்பால் விட்டு இரவு பகல் விடாது எறித்தெடுக்க (1 நாள் 24 மணி நேரம்) மணியாகும். இதுவே ஆடகேசுர குளிகை.

1 வருடம் முன்மணி போல் இதை வாயிலடக்க நரை, திரை, மூப்புப் புணி நீங்கி எமலபியை விலக்கும். திரிபலை கசாயத்திலாவது சூரணத்திலாவது நெய் தேன் கலந்து மணியை அதில் 4 மணி நேரம் வைத்துப் பின் குளிகையை நீக்கி எடுத்துக்கொண்டு அந்தக் கற்பத்தை சேவிக்கவும். இப்படித் தினம் தவறாது ஒரு வருடம் கடுகு நல்லெண்ணை புளி நீக்கிக்கொள்ள 2000, வருடம் ஜீவிப்பான்.

3. சுரசுந்தரி மணி: காந்தம், சொக்கத் தங்கம் வகை 1 களஞ்சி தாளகம் 5 களஞ்சு, பாரதம் 2 களஞ்சும் பூநாகச் சத்து மூன்று நிட்கம் துருசுச் செம்புப் பொடி ஒரு நிட்கம், இவை ஆறும் பொடிசெய்து கல்வத்திலிட்டு முன்கூறிய எண்ணிக்கை யத்தனை சேர்புளிப்பு வர்க்கநீரால் 3 நாளறைத்து உருட்டி தோலாந்திரத்தில் காடி நீரால் 3 நாள் எறித்தெடுக்க குளிகையாகும். இது சுரசுந்தரி குளிகை; இதை ஒரு வருடம் வாயிலடக்க முன் உள்ள கிழத் தன்மை

யும் எமலபியும் விலகும். 1 களஞ்சு நெய்யில் கிராமணம் செய்ய வேண்டும்.

4. நிராசு பீந்தக் குளிகை : தாமரை வளையத்துடன் (தாமரைக் கொடியால்) இரண்டு குகையும் மூடியும் செய்து அதனுள் கோழி முட்டைத் தூள் போட்டுப் பொருந்தவைத்து அதனடுவில் கொடிவேலி வேர் பட்டைத் தூள் 4 களஞ்சி போட்டு அதன்மேல் 4 களஞ்சி வாலை ரசம் விட்டு அவை நனைய அமிர்தப் பால் விட்டு மேலும் கொடிவேலித் தூள் களஞ்சு 4 போட்டு நன்றாய் மூடி அதன்மேல் மீண்டும் கோழி முட்டைத் தோடு தூள் போட்டு சட்டியில் வைத்து அடுப்பிலேற்றி எறிக்கும் சுள்ளிகளுக்கு எருமை நெய் விட்டு மந்தாக்கினியாக 1 சாமம் எரித்து (ஒரு சட்டி நடுவில் வைத்து சாய்ந்துவிடாமல் உபாய தந்திரமாய்) எரிக்க ஆறியபின் எடுக்கரசம் கட்டியாகி வெண்ணெ பதமாய் இருக்கும். இதன் பெயர் சுத்த ரச வெண் குளிகையாம். இதை முன் கூறியபடி இரசபந்தம் செய்யவும். வெண் எருக்கின் பால் எள்ளெண்ணெ சமன் கலந்து முயல் எலும்பையும் கலப்பைக் கிழங்கையும் கல்வத்திலிட்டு 4 சாமம் அறைத்து மெழுகு போலாக்கி இரச குளிகைக்குக் கவசம் செய்து வெள்ளைத் துணியால் கவசம் செய்து உலையாமல் சுற்றி நூலால் கட்டி 60 நாழிகை இருக்கும் படி செய்து கவசம் நீக்கி குளிகையை எடுத்துக்கொள்ள நிராசுபந்த குளிகையாகும்.

குளிகை பதம்

இரசம் வெண்ணெப் பதமாக வந்தால் அதுவே குளிகைப் பதமாம். குளிகைகளுக்கும் இரசலிங்கத்திற்கும் இப்பதமே சிறப்பு வேறு இரச முறைகளுக்கும் இதுவே பதமென்று கொள்ளவும்.

அமிலமென்ற புளிப்பு வகை விபரம் : காஞ்சிரை, கலப்பைக் கிழங்கு, நெல்லி, வேம்பு, கடலைப் புளிப்பு, நாணல் புல், புளியம் பிரண்டை, புளி, அரளிச்செடி, பசுமுன்னை, தொடரிச் செடி, அழிஞ்சி, சறக்கொன்றை, புளிப்பு மாதளை, வெள் எருக்கு, செந்தாமரை, அத்தி, நாரத்தை, புளியாரை, மாசிப்பத்திரி, கோரைக் கிழங்கு, எலுமிச்சன்சாறு என்பனவாகும். இவற்றுள் காணகாமிலம் என்ற கடலைப் புளிப்பும், புளியம் பிரண்டையும் சிறப்பானது.

எந்தவிதமான விறகிலும் சோறு சமைத்துண்ணலாம். பசியும் தீரும். இஃதே போல் ரசம் எவ்வகையிலும் கட்டி உருகி தீயில் நிற்கச் செய்தால் அதுவே பெரிய புதையலாகும். இது சகல சித்திகளையும் தரவல்லது.

(தொடரும்)

கைமுறை அனுபவ வைத்தியம்

(வைத்தியப் புலவர் பெஞ்சாமின், திருநெல்வேலி)

விஷக்கடிகளுக்கு

1, நல்ல பாம்புக் கடி: இதனை அரவம் தீண்டல், பாம்புக்கடி, பாம்புக் கொத்தல் என்னும் பல பெயர்களால் அழைப்பர். பாம்புக் கடி விஷங்களில் நல்லபாம்பு விஷமே மிகவும் கொடுமை வாய்ந்தது. விஷம் ரத்தத்திலேறித் தலைக்குச் சென்றால், தளர்ச்சியும், பிரமையும், மயக்கமும் காணும். நாடி பேதித்து நடக்கும். கடித்த வாய் வீங்கி வேதனை எடுக்கும். கடைசியாக மூர்ச்சைக் கண்டு மரணம் ஏற்படும்.

சிகிட்சை: பாம்புக் கடித்தவுடனே விஷம் மேலுக்கேறாமல் கயிற்றால் இறுக்கக் கட்டி, காயத்தைக் கொஞ்சம் கீறி, அதில் வாயாவது ஆட்டுக் கொம்பையாவது வைத்து உறிஞ்சி விஷத்தை எடுத்துவிட வேண்டியது. கடிவாயில் வெந்நீர் ஒற்றிடமிட்டால் அதிக இரத்தம் வடியும். காயத்தில் நவச்சார ஜயநீர் பூசலாம். உள்ளுக்கு சாராயம், நவச்சார ஜயநீர் இவைகளிலொன்றை கடியுண்டவன் ஏற்குமளவுக்கு குடிக்கக் கொடுக்கவேண்டியது. சிலர் கடுகை அரைத்து வெந்நீரில் கலக்கி குடிக்கக் கொடுப்பதுண்டு. இதனால் வாந்தியாகும். சிலர் ஆடு தீண்டாப்பாளை யிலையை அரைத்து ஜலத்தில் கரைத்துக் கொடுத்தும் நொச்சி, தும்பை, குப்பைமேனி, வேளை இவைகளின் ரசத்தை நசியமிட்டும் சிகிட்சை செய்வார்கள். மண்ணுள்ளி பாம்பு (சிறு பாம்பு) கடிக்கு நல்லெண்ணெயும் கூழும் கலந்து ஒரு வாரம் வரையில் உள்ளுக்குக் கொடுப்பதுண்டு.

2. வெறி நாய் கடி: இது ஒரு பயங்கரமான நோய். வெறி நாய்க் கடியின் ரணம் மிக்க வேதனையைத்தரும். இந்த வியாதியினால் தாக்குண்டவன் பிழைப்பது அரிது. வெறி நாய் கடித்தவுடன் அதனுடைய வாய் நீர் காயத்திலிறங்கி ரத்தத்துடன் கலந்து விஷமடையச் செய்து ரணக் காயத்தினால் ஜன்னிப் பிறக்கச் செய்கிறது.

முக்கிய அறிகுறிகள்: தொண்டை, மார்பு இவைகளில் கொறுக்கு வலி ஏற்படுதலும், ஈரல் தாங்கி சதையில் வலி ஏற்படுதலும், நீரைக் கண்டால் பயப்படுதலும், அரட்டல், புரண்டுதல், ஏக்கம், விகாரம், மனத் தளர்ச்சி முதலிய குணங் குறிகளைக் காட்டுதலுமாகும். இதை உடனடியாகக் கவனியா விட்டால் ஜன்னிப் புலப்பம் ஏற்பட்டு மரணத்தை உண்டுபண்ணிவிடும்.

பேய் நாய் கடித்து சில நாட்கள் சென்ற பின்னர் ஏற்படும் அறிகுறிகளாவன: மன் கலக்கம், குளிர்ச்சி, ஆயாசம் இவைகள் தொடங்கி, நித்திரையின்மை, மந்தாக்கினி, தலைவலிகள் ஆகியவை உண்டாகும்.

கடிவாயில் திமிராவது, அதிக வேதனையாவது இருக்கும். இவ்விதக் குறிகள் இரண்டு மூன்று நாட்கள் இருந்துவிட்டு. பின்னர் நிஜக் குறியை உண்டுபண்ணும்.

அவையாவன, பெருமூச்சு, குமட்டல், சுரம் ஆரம்பிக்கும். கழுத்தில் பிகுவு தோன்றும், மூச்சுத் திணறல், ஆகாரங்களை உட்கொள்ளும்பொழுது கஷ்டப்படுதல், நீர் பொருள்களைக் கண்டு அதிகப் பயம் கொள்ளல், உமிழ் நீர் அதிகமாய் சுரந்து காறித் துப்பல், முதலியன உண்டுபண்ணும். உடல் பூரா இசிவு பிறக்கும். அது நீரைக் கண்டாலும், நீர் விழுகிற சப்தத்தைக் கேட்டாலும், நீரைக் குடிக்கும்பொழுதும் அதிக துன்பத்தைக் கொடுக்கும். இது முதல் படி.

இரண்டாவது நாளில் எல்லா குறி குணங்களும் அதிகரிக்கும். தாகம் அதிகம் ஏற்படும். குலைவயிற்றில் வேதனை ஏற்படும். வயிற்றுப்பொறுமல் காணும்; முகம் எதையும் கண்டு ஆவல் கொள்ளும்; இறந்துவிடுவோம் என்ற மனக் கிலேசம் ஏற்படும். நெற்றியில் பிசுபிசுப்பான வியர்வை யிருக்கும். புத்தி தெளிவாய் இருந்தாலும் மன வியாகூலம் ஏற்படும்; மரணகாலம் நெருங்கும் பொழுது மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கும். இசிவு அடிக்கடிக் காணும். காதில் சப்தம் விழாத நிலையும் வெளிச்சத்தைப் பார்க்க முடியாத நிலையும் ஏற்படும். எச்சிலை உமிழ அதிக கஷ்டமாயிருக்கும். அடிக்கடி நீர் இறங்கும். கடைசியாக சகல அறிகுறிகளும் கண்டு மறைந்து உயிர் பிரியும்.

நாய் கடித்து சன்னி காணுகிற காலம் 40 நாள் முதல் $1\frac{1}{2}$ வருடம்வரை என்று கூறப்படுகிறது.

இது விஷத்தினுடைய வீரியத்தைப் பொருத்தும், கடிவுண்டவன் உடல் நிலையையும் பொருத்து, சீக்கிரமாவது அல்லது தாமதப்பட்டாவது ஏற்படும்.

குறிப்பாக, பேய் நாய் கடியின் விஷம் 6 நாள் வரையில் உடலில் இருக்கும். பேய் நாய் கடியால் எல்லோருக்கும் சன்னி ஏற்படாது. ஒரு சில நாய்களின் விஷமே மிகவும் கொடுமை வாய்ந்தது.

சிகிச்சை: இதை மருந்தினால் தடுப்பது மிகவும் கடினம். இருப்பினும் உடனடியாகத் தக்க வைத்தியர் துணைகொண்டு சிகிச்சை செய்தால் குணமாகும். முதலில் சன்னி தோன்றாமல் பார்த்துக் கொள்வது மிகவும் நலம். நாய் கடித்தவுடன், கடிவாயில் அதிக நீரைவிட்டு சுத்தி செய்து, காடிக் காரத்தை கடிவாயில் நன்கு அழுத்தி தேய்க்கவேண்டியது. உடலில் அதிக ஆயாசம், தளர்ச்சி இருந்தால் சிறிது அபினி கொடுக்கலாம்.

நாய் கடியுண்டவன் 40 நாட்கள் வரையிலும் செத்தப் பிணத்தை கண்ணால் பார்க்கக் கூடாது என்று கூறுவார்கள். இதில் உண்மை யிருக்கிறது. நானும் அநேகரை பார்வையிட்டிருக்கிறேன். வியாதி குணமானவுடன், பிணத்தைப் பார்த்தவுடன் மறுபடியும் வியாதி தோன்றி நாய் போன்றே குலைத்து செத்துப் போனதும்

உண்டு. அது எதனுல் என்று என்னுல் விஞ்ஞானக் கண் கொண்டு கூறமுடியாது. விபரம் தெரிந்த பெரிய வைத்தியர்கள் கூறினுல் நலமாய் இருக்கும்.

3. தேள் கொட்டல்: இதற்கு செய்யும் சிகிட்சைகள் எண்ணற்றவை. இதற்கு மந்திரிப்பதும் உண்டு. தேள் கொட்டிய வுடன் நவச்சார ஜெய நீர், வெடியுப்பு திராவகம், காடிக்காரம் இவைகளிலொன்றை கொட்டின இடத்தில் தடவினுல் விஷம் முறிந்துவிடும்.

கோழியின் மலப் புகையை கொட்டின இடத்தில் காண்பிப் பதும், வெள்ளைக் குன்றிமணி வேரை வெந்நீர் விட்டறைத்து, பிழிந்து, வடிகட்டி பஞ்சில் நனைத்துக்கொண்டு, இடது பக்கம் கொட்டினுல் வலது மூக்கிலும், வலது பக்கம் கொட்டினுல் இடது மூக்கிலும் நசியம் பண்ணுவதும் உண்டு. நட்டுவாக்காலி கொட்டி னுல் எட்டிவேரின் பட்டையை அறைத்து பெரிய நெல்லிக்காய் பிரமாணம் $\frac{1}{2}$ ஆழாக்கு வெந்நீரில் கறைத்து உள்ளுக்கு கொடுத்து, கொட்டின இடத்தில் கத்திரிக்காயைச் சுட்டு கட்டுவதும் உண்டு.

(சித்த வைத்தியர், வி. எம். பழனி நாட்டார், வேலூர். (வ. ஆ.)

மகா ஏலாதி மாத்திரை

1 ஏலக்காய், 2 அதிமதுரம், 3 சடாமாஞ்சில், 4 சுக்கு, 5 கோரோசனம், 6 இலுப்பைப் பூ, 7 கோரைக் கிழங்கு, 8 வெள்ளைக் கடுகு, 9 தேவதாரி, 10 நன்னரி வேர், 11 தாளிச பத்திரி, 12 கடுகுரோகணி, 13 லவங்கம், 14 வெட்டிவேர், 15 சந்தனத் தூள், 16 திராட்சைப்பழம், 17 நிலப்பனங்கிழங்கு. 18 அரிசி திப்பிலி மேற்கண்ட தினுசுகள் வகைக்கு 1 பலம் எடுத்து பொடி செய்து இளநீர் விட்டு அரைக்கவும் (செவ்விள நீர் விசேஷப் பட்டது) குண்டுமணி அளவு மாத்திரை செய்து புட்டியில் போட்டுக் கொள்ளவும். அனுபானம் :—இஞ்சி ரசம் அல்லது தேன் இவை களில் கொடுக்க ஜன்னி, கரபாத ஜன்னி, சீதள சம்பந்த ரோகங்கள் யாவும் நீங்கும். பத்தியம் : புளி கடுகு நல்லெண்ணை நீக்கி சுட்ட புளி சுட்ட உப்பு. இச்சா பத்தியம்.

மயிலிறகு சூரணம்

மயிலிறகு சுட்ட சாம்பல், கிராம்பு, திப்பிலி, அதி விடையம், வகைக்கு பலம் ஒன்ருக எடுத்து பொடி செய்து வைத்துக்கொண்டு தேனில் விரல் எடை சூரணம் குழைத்து கொடுக்க வாந்தி, இருமல், கக்குவான் இருமல் கோழை இவை களுக்கு கொடுக்கவும்.

மேகநாதக் குளிகை

1 வெங்காரம் 2 பெருங்காயம் 3 சிவதை வேர் 4 கழஞ்சி வேர் 5 மிளகு 6 திப்பிலி 7 லிங்கம் 8 சுக்கு 9 இந்துப்பு

10 குரோசானி ஓமம் மேற்கண்டவை வகைக்கு அரை பலமாக இவை மொத்த எடைக்கு சரி எடை சுத்தி செய்த நேர்வாளம் சேர்த்து எலுமிச்சம் பழச் சாற்றால் 2 ஜாமம் அரைத்து குண்டு மணி அளவு மாத்திரை செய்துகொள்ளவும்.

அனுபானம்

வெல்லத்தில் புதைத்து 10 நாள் கொடுக்க 5 வித குன்மம் நீங்கும். வெண்ணெயில் 7 நாள் சாப்பிட்டால் க்ஷயம், பாண்டு, காமாலை, அஜீரணம், பசி மந்தம், மகோதரம் முதலிய ரோய்கள் குணப்படும். சீரக சூரணத்தில் கொடுத்தால் 40 வித பித்தமும் குணமாகும். திரிபலாதி கியாழத்தில் 7 நாள் கொடுத்தால் இருமல் மந்தாக்கினி யாவும் தீரும். பேதி ஆகும். வாளத்திற்கு முறிப்பு : வசம்பு சுட்டு தேனில் குழைத்து கொடுக்கவும். பத்தியம் : சுட்ட புளி, சுட்ட உப்பு, புகை கூடாது, பார்லி கஞ்சி, வெந்நீர் சாதம் சாப்பிட வேண்டும். போகம் கூடாது, பத்தியம் இருந்தால் வியாதி கண்டிப்பாக குணப்படும்.

உப்பு சூரணம்

1 திப்பிலி 2 லவங்கம் 3 ஓமம் 4 ஏலம் 5 வளையலுப்பு 6 கறுப்பு உப்பு 7 சிகப்பு உப்பு 8 சோற்று உப்பு 9 கல்லுப்பு வகைக்கு $\frac{1}{2}$ பலம், நிலாவரை 1 பலம் இவைகளை கல்வத்தில் இட்டு சூரணம் செய்து சர்க்கரை $2\frac{1}{2}$ பலம் சேர்த்து இரவு சாப்பாட்டுக்கு பிறகு சாப்பிட்டு வந்தால் வாதம், வாயு, பித்த வாய்வு, மேக நீர், தேக நாற்றம், சிரங்கு, அஜீரணம், உப்புசம், வயிற்று இரைச்சல், பித்த குன்மம், வயிற்றுவலி, மலச் சிக்கல் இவைகள் தீரும். பத்தியம் : இச்சா பத்தியம்.

இராஜ வீரிய லேகியம்

1 நெருஞ்சிமுள் 2 தண்ணீர்முட்டான் 3 நீர்முள்ளி விரை 4 பூனைக்காலி விரை 5 இலவம் பிசின் 6 அக்ரூட் பருப்பு 7 பாதாம் பருப்பு 8 சாரைப்பருப்பு 9 பிஸ்தா பருப்பு 10 குல்குந்து வகைக்கு 1 பலம் வஸ்திரகாயஞ் செய்து வைத்து கொள்ளவும். ஒரு படி பசும்பாலில் அரிக்கால் ரூபா எடை அபினி யைக் கரைத்து அதில் 8 பலம் சர்க்கரை கூட்டி பாகு செய்து மேற் கண்ட சூரண தினுசுகளை கொட்டி நெய் 1 படி தேன் $\frac{1}{4}$ படி விட்டு கிளரி இறக்கி கொள்ளவும். 7 நாள் காலை மாலை பாக்கு அளவு சாப்பிட விசேஷ தாது வீர்யம் ஏற்படும். மருந்து சாப்பிடும்வரைக் கும் புளிப்பு கசப்பு புகை சம்போகம் கண்டிப்பாக கூடாது.

மகா மேக ராஜாங்க எண்ணெய்

1 சிற்றாமணக்கெண்ணெய் படி 2 2 சுருள்ளிச்சார் 3 கழுதைலத்தி ரசம் 4 வரிகொம்மட்டிச் சார் 5 கையாந்தகரைச்

சார் 6 புளியாரைச் சார் 7 சங்கஞ் சார் 8 வல்லாரைச் சார் 9 பொடுதலைச்சார் 10 தெருடம்பட்டைச்சார் 11 நொச்சிச்சார் 12 பொன்னாங்காணிச்சார் 13 நுரையிலைச்சார் 14 ஆடாதோடாச் சார் 15 கிரந்திநாயகச்சார் 16 வெள்ளருகுச்சார் 17 சிவன் வேம்புச்சார் மேற்கண்ட தினுசு 1-க்கு படி 1 ஆக ஒரு மண் பாண்டத்தில் ஒன்றாய்க் கலந்து அதில் சித்திரமூலம் பூவரசம் பட்டை நிலாவிரை வேர் துத்தி வேர் கற்றாழை வேர் அப்பைக் கிழங்கு சங்கங்குப்பி வேர் வகைக்குப் பலம் $\frac{1}{2}$ நிறுத்தெடுத்து உரலி விட்டு இடித்து $1\frac{1}{2}$ படி ஜலத்தில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து கியாழத்தை மேற்படி எண்ணெய் சாற்றுடன் கலந்து பின்பு அதில் ஜாதிக்காய், தான்றிக்காய், கிராம்பு, ஏலம், சன்ன லவுங்கப்பட்டை, வால்மிளகு, அதிமதுரம், கோஷ்டம், திப்பிலி மூலம், வெங்காரம், குரோசானி ஓமம், தாளிசபத்திரி, கஞ்சா, பரங்கிப்பேட்டை, வாலுளுவை, தக்கோலம், சீரகம், குங்குமப்பூ, சஸ்திரபேதி, சத்திச்சாரம், நவாச்சாரம், கடுக்காய், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், அரத்தை, சுக்கு, அதிவிடையம், வாளம், எவாச்சாரம், அக்கிராகாரம், கடுகுரோகணி, சடாமாஞ் சில், கசகசா, வலம்புரி காய், அழிஞ்சிற்பட்டை, சிறுநாகப் பூ, வசம்பு, ஆனைதிப்பிலி, சேங்கொட்டை மேற்கண்ட தினுசு 1-க்கு பலம் $\frac{1}{4}$ ஆக இந்த 39 கடைச் சரக்குகளையும் தூள் செய்து எண்ணெய்ச் சாருடன் கலக்கி அடுப்பேற்றி மெழுகு பதமாய் காய்ச்சி வடித்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் 3 நாள் 6 வேளை கொள்ள தீரும் வியாதி கிரந்தி, அரையாப்பு, சூலை விப்புருதி, கண்டமாலை, மேக உஷ்ணம், சோகை பாண்டு, சுழல்வாதம், பவுத்திரம், மூலப்புற்று, மண்டைச்சூலை, 18 வித சூலை வாயு முதலிய சகல ரோகங்கள் தீரும். பத்தியம்: வறுத்த துவரம் பருப்பும், வறுத்த உப்பும், சுட்ட புளியும் கூட்டி கடும் பத்தியம் இருக்கவும்.

(தொடரும்)

"வழிப் போக்க"னின் அனுபவ மொழிகள்

"நீ எந்த மனிதனையும் விட உயர்ந்தவனில்லை; ஆனால் எவனைவிட தாழ்ந்தவனுமில்லை."

நிஜானந்த போதம்

(சித்த வைத்தியர் தில்லை. ஆர். விஜயன் பி. ஓ. எல்
சூளை, சென்னை-7)

(முன் இதழ் தொடர்ச்சி)

நான்கு பதங்களாவன : கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகில் நோயின்றி வாழ்வதே சாலோக பதம். கடவுளை நம்பி போற்றி வாழ்வதே சாமீப பதம். குரோதாதி குணங்களை நீக்கி சத்வ குணமாக இருப்பதே சாரூப பதம், துவித பாவனைகளை நீக்கி ஆத்ம விசாரணை செய்து கடவுளோடொன்றிக் கலந்து அது தானாய் தானதுவாய் நிற்பதே சாயுச்ய பதமாகும். இந்நிலையே நமது முன்னோர்களாகிய சித்தர்களடைந்த பதம்.

அஷ்ட கர்மமாவன : (எண்வகைச் செயல்கள்) மாந்திரீக வழியில், வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆக்ருஷணம், வித்வேஷணம், பேதனம், மாரணம், என உண்டு. இவை எட்டும் ஆத்ம விசாரணைக்கே நம் மனதை சுத்த சித்தப்படுத்தி நல்வழியடைவதற்கே ஏற்படுத்தினர். இதை விவரிக்கில் பெருகும். ஆகையால் முக்கியமானதையே எழுதுகிறேன்.

பிராணாயாமத்தால் வாசியை வசப்படுத்தி கடவுள் திருவருள் மீது மோகித்து நித்திரையை நீக்கி கண் பார்வையை பகிர்முகப் படுத்தாமல் ஐம்பொறிகளை வித்வேஷித்து நான் என்னும் அகங்காரத்தைப் பேதித்து பூரணத்தில் மனதை ஐக்கியப்படுத்தி சஞ்சித வினைகளை மாரணம் செய்வதாகும்.

அஷ்டாங்க யோகமாவன : காமமாகிய யிச்சையை அறவே நீக்கி அது தோன்றுமலே செய்து தக்க ஆசனத்திலிருந்து நாம ரூபத்தை நாடும் மனதை இருதயத்திலிருத்தி புரவிஷயங்களை நீக்கி விகர்பமில்லாமல் தத்சொரூபத்தை நாடி ஒளி ஒலி தானே தானாய் ஒத்து நிர்விகர்ப்ப ரூபமாகுதலாகும்.

அணிமாதி சித்திகளின் விபரம் : அணிமா, சூக்ஷ்மகாரண, மகா காரண, சரீரமென்பதில் மகாகாரண சரீரமாய் அணு விலசைவாக நுழைவதும், மகிமா விஸ்வரூபமாய் தோன்றல், ஹரிமா, அதிக பளுவாக யிருத்தல், லகிமா தக்கையைப் போல் லேசாகக் காட்டல், பிராப்தி ரவிமதியோரை வசப்படுத்தல், பிரகாமியம் பிறர் சரீரத்தில் நுழைந்து நினைத்தவரிடம் அக்கணமே தோன்றல் (கூடுவிட்டு கூடு பாய்தலென்பது) ஈசத் தத்துவம், பஞ்சகிர்த்தியத் தொழிலை நடத்தல், வசித்வம் அண்ட முதலிய அனைவரையும் தன் வசமாக இருக்கச் செய்தல்.

தேகமைந்தின் விபரம் : இருள் தேகம், மருள் தேகம், சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என ஐந்தாம்.

இதில் இருள் தேகமாவது : ஸ்தூல தேகத்தில் அபானத்தில் மலக் குற்றம், நாவில் நாடிக் குற்றம், கண்டத்தில் கபக் குற்றம்,

மேல் மூலத்தில் திரைக் குற்றம், மனதில் ஆணவ மலம் பொருந்தி நானெனும் அக்யானக் குற்றம், இவ் வகைக் குற்றங்கள் இருந்து நம் சரீர அழிவுக் காரணமாக உள்ளது.

மருள் தேகமாவது : மாயா மல சம்பந்தமாய் தனக்கு வருவதறி யாமல் அகங்காரம் கொள்வது.

சுத்த தேகமாவது : கருவிகரணாதிகளிரந்து அறிவு அருள் வடி வாய் பார்வைக்கு தேகம் தோற்றும்.

பிரணவ தேகமாவது : தேகம் கண்ணுக்குத் தோற்றமளிக்கும் கைக்குத் தென்படாது, நிழல் சாயையும் கிடையாது.

ஞான தேகமாவது : கண்ணுக்குத் தோற்ருது அறிவிற்குப் புலப்படும் இதுவே தானதுவாவது கடவுளாவது அருட்பெருஞ் ஜோதி மயமாவது என்றும், எங்கும், எல்லாமாய் தானே தானய், தன்னையன்றி வேறொன்றும் இல்லதாய் விளங்குவது இதுவே நமது முன்னோர்களாகிய சித்தர்களடைந்தது.

திருக்கு திருசியமாவது : நாமரூப பிரபஞ்சம் இந்திரியங்களுக் குத் தோற்றமாகிறது, இந்திரியம் கரணங்களுக்குத் தோற்ற மாகிறது, கரணங்கள் சீவனுக்குத் தோற்றமாகிறது, சீவன் சீவ சாட்சிக்குத் தோற்றமாகிறது, சீவசாட்சி விவேக ஞானத்திற்குத் தோற்றமாகிறது, விவேகஞானம் பரிபூரண சைதன்னியமென்னும் அறிவுச் சுடருக்குத் தோற்றமாகிறது, இந்த சொரூப நிலையே தானென்றுணர்ந்து அதுவாய் விளங்குவர் ஞானிகள்.

ஞானிகள் தேக சித்தியாதர்க்கு தச தீட்சை விபரம் : முதல் தீக்ஷயில் ரோம துவாரங்கள் வழியாக கெட்ட நீர்கள் வியர்வை யாகக் கழியும். இரண்டாவது முத் தோஷமாகிய வாத பித்த சிலேத்தும, தோஷங்கள் நீங்கும். மூன்ருவது பழைய கெட்ட உதிரங்கள் கசிந்து கழியும். நான்காவது சர்ப்பம் தோலுறிப்பது போல் சரீரத்தில் தோலுறியும். ஐந்தாவது சட்டை கழன்று தேகம் சிவந்த நிறமாய் பஞ்சமூர்த்திகள் கோரியதைத் தருவர். ஆருவது சட்டை கழன்று சுழிமுனை வாசல் திறந்து தூரதிருஷ்டி தெரியும். ஏழாவது சட்டை வெளுப்பாகக் கழன்று தேகம் தீபம் போல் பிரகாசிக்கும். எட்டாவது சடத்தை உயரத்தூக்கும் லகிறிய மாகும் கூடுவிட்டு கூடு பாயும் சக்தி கிட்டும். ஒன்பதாவது தேகம் சூரியப் பிரகாசமாய் அஷ்டமாசித்தியும் கைலாய தேகமாய் தேவர் கள் ஏவல் புரிவர். பத்தாவது தேகம் தீபம் போல் பிரகாசித்து தேகத்தை வெட்டகத்திவோடும் சொரூப சித்தியும் அண்டத்தில் மௌனமும் நரை திரை மூப்பாகிய பிணிகளற்றுவிடும் (மரணம் கிடையாது) இதன் செய்முறைகளை அகத்தீசர் பூரண சூத்திரம் 216ல் காணலாம். ஆயினும் இதை குரு மூலம் தெரிந்துகொள்வதே சாலச் சிறந்தது.

தவசிகள் வாசியையே ஆதாரமாகக் கொண்டனர். வாசி என் பது பிராண வாய்வு. இதைக் கொண்டே சகல சித்திகளையும் பெற்ற

னர். சுட்ருன சுழிமுனையில் சந்திரன் சேரில் பஞ்சபூதமும் அறிவும் ஒடுங்கும், ரவிசேரில் ஐம்புலனும் அறிவும் பெருகும், ரவி, மதி ஒன்ருகக் கூடி சுழியிடம் ஒடுங்கில் அறிவும் தசவாயுக்களும் ஒடுங்கும், வாசி நடுநிலையிலும் மூலத்திலும், நாபியிலும், கண்டத்திலும் சுழியிடமும் சதா நிற்பவர்கள் தான் மெய்ஞ் ஞானிகள்.

சாகாக் காலையும் வேகாத் தலையும் மணியாடும் கோணத்தையும் ஆசான் முன்னிலையில் தெரிந்து மும் மூலமாகிய உந்தி மார்பு நெற்றிக்கண்ணிட மிருப்பர். அமாவாசை அன்னந் தண்ணீரிரங்குமிடம், பருவம் அன்னரசம் பிரிக்குமிடம், நாதமென்பது தீமனம், விந்தென்பது வாசி, தீயானது வாசிமீதேறி விளையாடும் சாகாக்கால் வாசி வாய்வு வேகாத் தலை, ஆகாச வெளி போகாப்புனல் ஆவியாகிய வன்னி ஆக மூன்றும் கூடியது நாதமென்னும் மண்ணும் தண்ணீருன இரண்டும் விந்துவாக விளங்கும்.

மூன்றெழுத்தென்பது : பதி, பசு, பாசம்.

அறிவு : வாசி - சோதி. ஸ்தூலம் - சரீரம் சூஷ்மம் - ஆவி காரணம் - பரம். பதி - பரம். பசு - வாசி. பாசம் - கயர் சத்தி - தீயாகிய நெருப்பு. சிவம் - வாசி. பூரணம் - சலம். அடி சந்திரன். நடு - சுழி. முடி - சூரியன். ரேசகம் - சூரியன் பூரகம் - சந்திரன். கும்பகம் - சுழிமுனை. காமப்பால் - ரவி கானற்பால் - மதி. சோமப்பால் - அக்கினி. சீவாத்மா - மூலத்தீ பரமாத்மா - வெளி. பேசாவெழுத்து - மனம். பேசுவெழுத்து வாசி. அந்தி - சூரியன். சந்தி - சந்திரன். உச்சி - சுழிமுனை விட்ட இடம் - ஆகாய வெளி. தொட்ட இடம் - வாசி. மூலக் கனல் வாசி, வாசி - பிராணன். பிராணன் - தீபம். தீபம் யோகமாகும்.

மதம் 3 : சாதி மதம். பொருள் மதம். கல்வி மதம். சட்டை உரிப்பது - தொண்ணூற்ருறு தத்துவம் தொண்ணூற்ருறு. புளியால் திரையும். உப்பால் நரையும், உண்டாகின்றது.

துவாரா 10 வகை :

அவை : சீவத்துவாரா. விகாரத்துவாரா. அங்கத்துவாரா. விசேட சாதித்துவாரா. ஆசிர்ம துவாரா, நாமத்துவாரா. சமஸ்காரத்துவாரா. வேஷத்துவாரா. கிரிகையாதி துவாரா. ஞானத்துவாரா. எனப் பத்து வகைப்படும்.

மும்மணி என்பது

ரவி - சொரூபமணி. மதி - கமலமணி. சுடர் - அட்டமா சித்திமணி.

பூமி - சக்தி. ஆகாயம் - சிவம். இது மும் பூவறிய மிக முக்கியமானது. இதை விரித்தெழுதுவது முறையல்ல. தகுந்த ஆசானை யடுத்து செவிமடுத்துத் தெளிவதே சாலச் சிறந்தது.

சக்தி - உடல். சிவம் - உயிர். தீபம் - அறிவு. வாசிமூல அனல் - பிராணன், தீபம். நந்தி - நேத்திரம். மனோன்மணி - மனம். புருவ மூலை - சொர்க்க வீடு. பரகெதி - துவாதசாந்தம். அகாரம் - சத்தம் அதுவே ஆத்துமா. அந்த அகாரத்தை தெரிந்து முறைப்படி தியானிக்க அகத்திசரருள் கிட்டும். ரவி - மதி - சுடர் மூன்று மொன்ருனல் நவநீத கிருஷ்ணனெனப் புகலுவர் மேலோர். சந்திரனை நோக்க (அதாவது வாசி வழி) வெட்ட வெளிபோல் காணும் அதுவே சிவபதமாகும். " கூர்ந்தப்பா சந்திரனி லேறு ஏறு " என்று அகத்தியர் பாடல் குறிக்கின்றது. ரவியைப் பார்க்க இருதயத்தில் ரவிபிரகாசம் தோற்றும் அது சத்தி பாதிபமாகும்.

ஸ்தூல தேகத்தை போஷிக்க ஆகாரம் கொடுப்பது போல் சூஷ்ம தேகமாக விளங்கும் ஆவியாகிய வன்னிக்கு ஆகாரம் சந்திரன். அச் சந்திர கிரணங்களின் அமுதத்தை கொடுக்காவிட்டால் மூல அனலுக்கு ஆவி குறைந்து ஆயுள் குறைந்து விடுகின்றன. அண்டத்தில் சந்திரனில்லையேல், குளிர் சக்தியில்லை, குளிர் சக்தியில்லையேல் நீர் சக்தியில்லை, நீர் சக்தியில்லையேல் சூரிய வெப்பத்தால் உலகம் என்னுகும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந் நவீன காலத்தில் விஞ்ஞானிகள் சந்திர மண்டலத்தையே ஆள எண்ணுகின்றனர். அதன் சக்தி என்ன என்பதையே இன்னும் அவர்கள் உணரவில்லை. நிச்சயமாக அவர்கள் அங்கு சென்று திரும்ப முடியாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. தவிர ஒரு விஞ்ஞானி அவருடைய சிறந்த கருத்தை வெளியிட்டார். அதாவது சந்திரனை ராக்கெட்டால் மூன்று துண்டுகளாக உடைத்து விட வேண்டுமென்று எழுதி யிருந்தார். இக் கால வானிலை ஆராய்ச்சி நிபுணர்கள் பல கருவிகளைத் துணைக் கொண்டு வானிலை அறிக்கை கொடுக்கிருர்கள். ஆனல் நடப்பது வேறு விதமாக நடக்கிறது. இதை நாம் கண்கூடாகக் காண்கிருேம். இக் கால நவீன வைத்தியர்கள் பல கருவிகளைக் கொண்டு ஒரு நோயாளியை பரீக்ஷித்துப் பிறகு மலம், மூத்திரம், சளி, ரத்தம் வியர்வை நீங்கலாக மற்றவைகளைச் சோதித்தும் வியாதி புரியாமல். நோயாளியை கேட்டும், ஏதோ சிகிச்சை யளிக்கிருர்கள், நம் முன்னோர்கள் " நாடியைப் பார்த்தால் வியாதியைத் தேடிப் பிடிக்கலாம்." என்று நாடி பார்த்து குணப்படுத்தினர், அதுபோல் நம் முன்னோர்களாகிய சித்தர்கள் அண்ட சராசரங்களையும் அதன் தன்மைகளையும் செயல்களையும் அறிவாலறிந்து எழுதி வைத்தனர். அதன் கணிதப்படி இப்போதும் கணிக்கின்ற பஞ்சாங்கம் சரியாக இருக்கிறது. இக் கணிதம் கருவிகளைக் கொண்டா கணிக்கப்படுகிறது ? மேலும் முக்கியமாக நம்முன்னோர்களாகிய சித்தர்கள், அண்டத்தையும் பிண்டத்தையும் சேர்த்து பாடி யிருக்கிருர்கள். அண்டத்தில் உள்ளவைதான் பிண்டத்தில், பிண்டத்தில் உள்ளவைதான் அண்டத்தில், இதற்குப் பல நூற்கள் சான்று கூறுகின்றன.

" அகர முதலவெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (குறள்)

இதற்குப் பலர் பல பொருட்கள் கூறுவர் ஆயினும், "அ" என்ற ஒலி பிறப்பு உயிரினங்கள் பிறந்த உடனே முதன்மையாக வாயைத் திறந்தவுடன் வரும் ஒலியாகும். அந்த உயிர் பிறப்புக்குக் காரணமான அடிப் படி நாத விந்துக்களே, அதாவது ஆதி என்ற நாதமும் பகவன் என்ற விந்துவும் சேர்ந்தே பிண்டமாயிற்று அதேபோல் அண்டத்தில் ஆதி என்ற பூமியின் நாதமும் பகவன் என்ற விந்தாகிய, சூரியகிரண சக்தியிலுள்ள உயிர்சத்தும் சேர்ந்து இவ்வுலகு தோற்றமாயிற்று என்பதே பொருளாகும்.

மரம் முதலில் வந்ததா? வித்து முதலில் வந்ததா? (முட்டை முதலா? கோழி முதலா?) இந்தக் கேள்வியை சிந்தித்துப் பாருங்கள். இவ்வுலகிலுள்ள தாவரங்கள் எண்ணற்ற ஜீவராசிகள் தோன்றக் காரணம் எப்படி என்று ஆராயுமிடத்து நம் முன்னோர்கள் சொல்லிய உண்மைப் பொருள் சரியென விளங்கும்.

"விந்து நிலையறிந்து விந்து பாயுங் காலம்
வேதாந்த நாதமதற் குயிருண்டாகி
சொந்தமுடன் றிரண்டுடனே மணியுமாகி
சோதிமணியானதுவும் பிறையுமாகி
வந்த மதிப்பிறையதுவும் வட்டமாகி
வட்டமது திரண்டுருவாய் மண்ணுமாகி
அந்தமுள்ள மண்ணு கரியுப்பாய் நின்றே
யாதியென்ற பொருளான பிண்டமாச்சே."

என்று அகத்தியர் பரிபூரணம் 400 கூறும். இன்னும் ஞானவெட்டியான் போன்ற பல சித்தர்களின் நூற்கள் சான்று கூறுகிறது.

குலம் இரண்டு

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ளபடி (ஔவை)

என்பது போலும் குலம் என்பதும் சாதி என்பதும் முடிவாகப் பார்க்கில் மானிடப் பிறவிகளில் ஆண் பெண்ணாக விளங்குவதில், கொலை, களவு, காமம், பொய்யாகிய பாதகத் தொழில்களை அறவே ஒழித்து சத்வ குணத்தோடும் உள்ளன்போடும் பரம்பொருளை அறிந்து தானே தானாய் ஆத்ம விசாரணை செய்து முடிவை நாடி நிற்பவரே மேலாம் குலம் எனப்படுவர்,—காமாதிகளைக் கைக்கொண்டு நன்மை தீமைகளை உணராமல் புலால், மது, முதலியவைகளையே தனக்குரியதாக உண்டு ஊண், உரக்க, மைதுனமே பெரும் போகமென எண்ணி அதனால் ஐம்பெரும் பாதகத்தொழிலையும் அஞ்சாமல் செய்து மிருகாதிகளைப் போல் வாழ்பவர் கீழ்குலத்தோராவர். மற்றும் சிலர் மனதை ஒருமுகப்படுத்தாமல், குரு

பீடமெனவும், யோகி எனவும், காவிதரித்து, தண்டுகமண்டலங்களேந்தி விபூதி பூசியும், வைணவ சம்பிரதாய பன்னிரண்டு நாமங்களைச் சாற்றி சதா ஆலயம் புகுந்தும் ஐந்துகால சபதப, அனுஷ்டான சந்தியாவந்தனம் புரினும் ஒரு பயனுமிருது போலிவேடதாரியாகவே பிறரை வஞ்சித்தும் கள்வனுகி முடிவில் தனக்குத் தானே வஞ்சித்துக்கொண்டு மடிவான்.

மாத்தானவத்தையும் மாயாபுரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்கோரு நிட்டையுண்டோ நித்தன்பு கொண்டு
வேர்த்தாற்குளித்து பசித்தால் புசித்து விழிதுயின்று
பார்த்தாலுலகத்தவர் போலிருப்பர் பற்றற்றவரே.

(பட்டினத்தார்)

இந்த உண்மையை உணரவேண்டும் (முக்கியமாக) இந்த வேடதாரிகள்.

ஓர் அறிவிப்பு ?

வைத்தியர்கள் - டாக்டர்கள் - கம்பவுண்டர்கள் - ஹோமியோபதி வைத்திய சாலைகள் - மருந்துக் கடைகள் – ஜெனரல் மெர்ச்சண்டு & மளிகை கடைகளுக்கும் எமது வைத்திய சாலையில் தயாராகும் மிகச் சிறந்த

மூன்று வகையான பேதி மருந்துகள்!

மாதிரி சாம்பிள் இலவசம் !

1 ரத்னு சுகபேதி அல்வா (இனிப்புள்ளது)
2 S. V. R. சுகபேதி எண்ணை (காப்பியில் சாப்பிட)
3 S.V.R. சுகபேதி மாத்திரை (சக்கரையில் சாப்பிட)

விற்பனையாளர்களுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் சப்ளை செய்யப்படும்.

—— தேவைக்கு எழுதவும் ——

தயாரிப்பாளர் : சித்த வைத்திய பண்டிட்

S.V.R. கண்டர் சன்ஸ் R.I.M.P.

"இராஜ சித்த வைத்தியசாலை"

அரிசிப்பாளையம் :: சேலம்-9.

N. B:—மற்றும் எமது வைத்திய சாலையில் தயாராகும் மருந்துகளின் கேட்லாக் இலவசம்.

எனது அருமை நண்பர்களே!

உங்கள் உடல் நலம் பேணுதல் உங்கள் வாழ்வுநிலை உயர்வதற்கு உகந்ததும் அவசியமுமாகும். ஏதேதோ காரணங்களால் எதிர்பாராத பல நோய் நொடிகளுக்கு இலக்காகி கவலையே வாழ்க்கையாக மாறிவிடாமல் இருக்க, வருமுன் காக்கும் நினைவில்லாவிட்டாலும் வந்த பின்னுவது சீரான முறையில் சிகிச்சை பெற்று நலம் பெறுவதற்கு இப்போதே முயற்சித்தால் பயனுண்டு, நல்ல வாழ்வுண்டு. நீங்கள் நேரில் சந்திக்க விரும்பினாலும் சரி, விபரம் தெரிவித்துப் பரிகாரம் நாட விரும்பினாலும் சரி, கீழ்க் கண்ட முகவரிக்கு உடன் எழுதுங்கள். அதிக உஷ்ணத்தாலும், கண் எரிச்சல், தலைவலி, வயிற்றுவலி மலச்சிக்கல், முட்டி, முதுகு, இடுப்புவலி, நரம்புத் தளர்ச்சி, சக்தி நலிவு ஆகிய நோய்களுக்கு நிவாரணியாக உள்ள கீழ்க்கண்ட எமது மருந்துகளை வாங்கிச் சாப்பிடுங்கள். உஷ்ணம் குறையும், ரத்தவிருத்தி ஏற்படும், சக்தி வளரும்.

1. நெ. ஸ்பெஷல் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 33-00
2. நெ. கால்சியம் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 23-00

விபரங்களுக்கு :

தலைமை ஆபீஸ் :

சிவராஜ்
சித்த வைத்திய சாலை

சிவதாபுரம் போஸ்டு

சேலம் 2

உடம்பின் வெப்பத்தை ஒரே அளவில் சீராக வைத்திருக்கும் வேலையை சருமம்தான் செய்கிறது. இந்த வெப்ப நிலை கூடினாலும் குறைந்தாலும் நோய் வந்துவிடுகிறது. மிதமிஞ்சிய உஷ்ணத்தினாலும, குளிரினாலும் சருமம் பாதிக்கப்படுகிறது.

உங்கள் சருமம் வலிவுடனும், பொலிவுடனும் வளம் பெறவும், திரேக தத்துவத்தைச் சீராய்க் காத்துக்கொள்ளவும்.

ரிஜிஸ்டர் நிர். 3010

மந்தித்தோப்பு மணிகட்டி சுவாமிகள்

சர்வரோக சஞ்சீவித் தைலம்

ஸ்நானம் செய்யுங்கள்

தயாரிப்பவர்கள்:
ச. பெ, வடிவேல் நாடார்
அன் சன்ஸ்.
மந்தித்தோப்பு
மணிகட்டி சுவாமிகள்
சித்த வைத்தியசாலை.
25, டவுன் ஹால் ரோடு,
தபால் பெட்டி
நிர். 106 மதுரை-1
தந்தி: "THAILAM"
போன்: 2745

தி இந்தியன் மெடிகல் பிராக்டீஷனர்ஸ் கூட்டுறவு பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185.

அடையாறு, மதரூஸ்-20.

தபால் பெட்டி 907. *போன்* **71013, 71014**

தலைவர் : *உபதலைவர் :*

Dr. V. நாராயணசாமி H.P.I.M., **M. A. பத்மநாபராவ்.** L.I.M

அங்கத்தினராகும் வாய்ப்பு :

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள மாகாணங்களில் பதிவு பெற்ற வைத்தியர்களும், மற்றும் பட்டம் பெற்ற வைத்தியர்களும்.

2. பஞ்சாயத்து முனிஸிபாலிடி மற்றும் இந்திய வைத்திய இலவச ஆஸ்பத்திரி நடத்தும் குழுக்களும் கழகங்களும்.

3. பிரதம கூட்டுறவு சங்கங்களும் மத்திய கூட்டுறவு சங்கங்களும்.

நாங்கள் சிறந்த முறையில் சாஸ்திரீய முறைப்படி ஆயுர் வேத, சித்த, யூனானி மருந்துகளைத் தயார் செய்கிறோம்.

எங்களுடைய மருந்துகளைப் பதிவு செய்யப்பட்ட மருந்து ஷாப்புகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

எமது புதிய வெளியீடுகள் :

1.	வைத்திய யோகரத்னவளி	(ஆங்கிலம்)	ரூ.	6—50
2.	,, தமிழ் ரூ. 6—00	(தெலுங்கு)	ரூ.	6—00
3.	சித்த பார்மகோபியா	(ஆங்கிலம்)	ரூ.	3—00
4.	,, தமிழ் ரூ. 3—00	(தெலுங்கு)	ரூ.	3—00
5.	யூனானி பார்மகோபியா	(ஆங்கிலம்)	ரூ.	3—00
6.	,, தமிழ் ரூ 3—00	(தெலுங்கு)	ரூ.	3—00
7.	ரசரத்ன சமுச்சயம்	(தெலுங்கு)	ரூ.	10—5

தபால் செலவு தனி

கிளைக் காரியாலயங்கள் :

1. 20-320 பொட்டி பொட்லவாரி வீதி, கவர்னர்பேட்டை விஜயவாடா (ஆந்திர ராஜ்யம்).
2. 264, காட்டன்பேட்டை பெங்களுர்-2 (மைசூர் ராஜ்யம்)
3. நகர விற்பனை நிலையம் :—4-186 மவுண்ட்ரோட், சென்னை-2.
4. கிளை விற்பனை நிலையம்:—வைஸ்ய ஹாஸ்டல், கச்சிகூடா ஸ்டேஷன் ரோட், ஐதராபாத்.
5. 48, தெற்கு மாசி வீதி, மதுரை-1

Y. கொண்டல் ராவ்,
காரியதரிசி.